1986 மே 3]

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சிமெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக மதுரையில் ஒரு சிமெண்ட் ஆலையை ஆரம்பிக்கும் ஒரு ப்ரபோசல் இருக்கிறதே, அது எந் நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, நான் இதை மானியக் கோரிக்கையிலே எடுத்துச் சொன்னேன். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரவ நைட்ரஜன் தொழிற்சாலை.

612 — (* வினா எண் 5009-ஏ) திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் திரவ நைட்ரஜன் தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

டை ஆக்ஸைடு தொழிற்சாலை.

613—(* வினா எண் 5533) திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில், குமரி மாவட்டத்தில் உள்ள கடலோரப் பகுதிகளில் கிடைக்கும் இலுமினெட்டில் இருந்து டை ஆக்ஸைடு (Titanium Di-oxide) தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், துவக்கப் பணிகள் எப்போது துவங்கப் பெறும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இலுமினெட் 75,000 டன், ஒரு ஆண்டிற்குக் கிடைக்கிறது. இதை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி, அதை அவர்கள் டைட்டேனியம் டை ஆக்ஸைடு, டைட்டேனியம் மெடல்ஸ் ஆக்கச் சொல்லி, ஃபைன் க்வாலிட்டி திரும்ப இந்தியாவிற்கு தருகிறார்கள். குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இத்தகைய பொருள்கள் இருக்கின்றன. இதை நம்முடைய அரசு பரிசீலித்து, 75,000 டன் கிடைக்கின்ற இலுமினெட்டை வைத்து, ஒரு தொழிற்சாலையைத் துவங்கினால், பயனுள்ளதாக இருக்கும். ஏனென்று சொன்னால், குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எந்த ஒரு அரசுடைமையாகவோ, அல்லது தனியார் நடத்துகின்ற தொழிற்சாலையோ இல்லை. ஆகையால் ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மத்தியப் பேரரசைச் சார்ந்த இந்தியன் ரேர் எர்த் நிறுவனம் அந்தப் பணியிலே தன்னை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறது. இலுமென்ட்டிலிருந்து டைட்டேனியம் டை ஆக்ஸைடு செய்வதற்கு ஏராளமான பொருள்கள் தேவை. மின்சாரம் தேவை. வெளிநாட்டு நுட்பம் தேவை. அதோடு இது இலாபகரமாக நடக்கிறதா, நடத்த முடியுமா என்பதையும் நாம் ஆராய வேண்டியிருக்கிறது. ஆகவே இதைப் பரிசீலித்துத் தான் முடிவுகளை அரசு மேற்கொள்ள முடியும்.

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவர் அவர்களே, இன்ப்ராஸ்டரக்சர் என்கிற வகையில் தண்ணீர் வசதியும், அதிகமாக கடலோரப் பகுதியில் அங்கே இருக்கிறது. மேலும் அந்த இடத்தைப் பொறுத்தவரையில், எல்லா வாகன வசதிகளும் இருக்கின்றன. படித்த மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தில் மூலப்பொருள் அதிகமாக இருப்பது இந்த இலுமெனட்தான். ஆகவே தான் மத்திய அரசு ரேர் எர்த் நிறுவனத்தை, அவர்கள் அந்த டைடேனியம் ஆக்சைடு செய்கின்ற தொழிற்சாலை இல்லை என்பதால் அவர்கள் அதை எடுத்த

வுடனேயே இந்த இல்லுமெனைட்டை எடுத்து ப்யூர் செய்வதற்கு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ஆகையால் நான் கேட்டுக் கொள்வது, மாநில அரசு டைட்டேனியம் தயார் செய்கின்ற ஒரு தொழிற்சாலையை அமைத்து, அதன்மூலம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது போல், இன்றைக்கு பல பொருள்கள் தேவைப்படுகின்றன. ஆகவே தான் ரேர் எர்த் நிறுவனம் கூட, மத்தியப் பேரரசைச் சார்ந்த நிறுவனம் கூட, அதை எடுத்து வெளிநாட்டிற்கு அனுப்புகிறது. இங்கே இதையெல்லாம் செய்ய வேண்டுமென்று சொன்னால், அது லாபகரமாக இருக்குமா என்பதை தமிழ்நாடு தொழில் முதலீட்டு வளர்ச்சிக் கழகம் ஆராய்ந்துகொண்டிருக்கிறது. இது லாபகரமாக இருக்கும் என்று தெரிந்தால், அந்தத் தொழிற்சாலையை அமைப்பது பற்றி, இந்தத் தொழில் வளர்ச்சிக் கழகம் ஆலோசிக்கும்.

தென்காசியை தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவித்தல்

614 — (*வினா எண். 7737) **திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்காசி தாலுகாவை தொழிற்துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காக்களாக அறிவிப்பதற்காக பாண்டே கமிட்டி அமைக்கப்பட்டு அந்த பாண்டே கமிட்டியின் தீர்வின்படி திருநெல்வேலி மாவட்டத்தில் 6 தாலூக்காக்களை அவர்கள் ஆராய்ந்து அதிலே தென்காசி தாலூகாதான் தொழில் துறையில் பின்தங்கிய தாலூகாவாக அறிவிக்கப்பட இலாயக்கானது, ஏனென்றால் அங்கு பலதும் இருக்கின்றன என்று அவர்கள் அறிக்கையில் வெளியிட்டிருக்